TNVR250008322024

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

முன்னிலை. திரு. மூ.ராமநாதன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 25 ம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.176/2024

அரசுக்காக / காவல் சார்பு ஆய்வாளர்

கூமாப்பட்டி காவல் நிலையம்

குற்ற எண்.155/2019 ..... குற்ற முறையிடுபவர்

-எதிர்-

1. தமிழரசன் (வயது - 34/2026)(A1)
   த/பெ. கருப்பையா,
   அம்பேத்கர் தெரு,
   இராமசாமியாபுரம்.
2. பாலு என்ற ஆனந்தபாபு (வயது - 34/2026)(A2)
   த/பெ. துரைச்சாமி,
   அம்பேத்கர் தெரு,
   இராமசாமியாபுரம்.
3. பாண்டி (வயது - 29/2026)(A3)
   த/பெ. பழனிவேல்,
   அம்பேத்கர் தெரு,
   இராமசாமியாபுரம்.
4. சுருட்டை என்ற பொன் இருளப்பன் (வயது - 28/2026)(A4)
   த/பெ. சுப்பிரமணியன்,
   அம்பேத்கர் தெரு, இராமசாமியாபுரம். .... எதிரிகள்

இவ்வழக்கானது மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், திருவில்லிபுத்தூரில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆள்வரையறையின் காரணமாக

இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கடந்த 02.09.2024 ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு முழு விசாரணைக்குப் பின்னிட்டு இறுதியாக 23.06.2026 அன்று இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை II திரு.ஜெயக்குமார்., அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

Case Summary Details as per The Hon'ble Madras High Court
ROC No.814/2020/RG/F1 dt.1.4.2021

| Sl.No. | Particulars | Date |
|---|---|---|
| i) | The Period of the remand/bail of the accused | A1 – 07.11.2019 /12.11.2019<br>A2 to A4 – 19.11.2019 (AB) |
| ii) | The date of filing of the complaint/final report in the Court | 02.11.2019/ 20.02.2020 |
| iii) | The date committal of the case to the Court of Session | NIL |
| iv) | The date of questioning of the accused under section 240 | 28.12.2020 |
| v) | Filing of all miscellanous petitions and their results including the results on challenge before superior Courts : | 320 CrPC Petition filed in Cr.M.P.No.318/2026 dated 23.06.2026 |
| vi) | Date of examination in – chief and cross-examination of a witness : | PW1 – 23.06.2026<br>PW2 – 23.06.2026<br>PW3 – 23.06.2026 |
| vii) | Date of examination of the accused under Section 313(1)(b) of the CRPC | 23.06.2026 |
| viii) | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | NIL |
| ix) | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடப்பட்டது | : | 1, 4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது |

| | | |
|---|---|---|
| | | பிரிவுகள் 294(b), 323, 336, 506(ii) இதசவின் கீழும், 3 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் |
| குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | | 1 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 336, 506(ii) இதசவின் கீழும், 3,4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழும், |
| குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்மானம் | : | முடிவாக,1 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 336, 506(ii) இதசவின் கீழும், 3,4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களை குவிமுச 248(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

## தீர்ப்புரை

**புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற பத்திரிக்கையின் சுருக்கம் -**

இவ்வழக்கில் கடந்த 26.10.209 ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் கூமாப்பட்டி, இராமசாமியாபுரத்திலுள்ள V.M. மணி ஜவுளி கடையில் புகார்தாரர் லட்சுமணனும், சாட்சி விஜய் என்பவரும் தீபாவளிக்கு ஜவுளி எடுத்துக்கொண்டிருந்தபோது, 1 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் ஜவுளிக்கடையில் வேஷ்டி திருடியதை ஜவுளிக்கடை கேமரா மூலமாக பார்த்து சத்தம்போட்டதால், புகார்தாரர் தான் மேற்படி ஜவுளிக்கடை ஓனரிடம் சொல்லியுள்ளார் என்று மனதில் வைத்துக்கொண்டு, 27.10.2019 ம் தேதி இரவு சுமார் 08.20 மணியளவில் புகார்தாரரும், சாட்சி

ஜெனித்குமார் என்பவரும் இராமசாமியாபுரம் ராஜ்குமார் மருத்துவமனைக்கு முன்புள்ள தங்கத்துரை டெய்லர் கடையில் நின்று கொண்டிருந்தபோது, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் புகார்தாரரை பார்த்து விஜய் எங்கடா என்று கேட்டும், புகார்தாரரை பார்த்து ஏண்டா பிள்ளைமார் புண்ட மக்கா விஜய் எங்கனு கேட்டா சொல்ல மாட்டியா தேவடியா மகனே என்று அசிங்கமாக பேசியும், 1,2 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இருவரும் கீழே கிடந்த கம்பால் புகார்தாரரின் உடல் முழுவதும் மாறி மாறி அடித்து வலிக்காயத்தை ஏற்படுத்தியும், 3 வது குற்றம் சாட்டப்ப்ட்ட நபர் கையில் வைத்திருந்த கம்பியால் புகார்தாரரின் இடது முழங்கையில் அடித்து வீக்கக் காயத்தை ஏற்படுத்தியும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் கல்லால் புகார்தாரரின் மீது எறிந்ததில் புகார்தாரரின் கண்ணுக்கும், வலது காதுக்கும் இடையே பட்டு ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், தடுக்க வந்த சாட்சி ஜெனித்குமாரை 2 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கம்பாலும், கையாலும் சரமாரியாக தாக்கி இடது கண் புருவத்தில் ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், வலது நெற்றியில் வீக்கக்காயத்தை ஏற்படுத்தியும், சாட்சிகள் சத்தம்போட்டு விலக்கிவிட்டபோது, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி புகார்தாரரையும், சாட்சிகளையும் பார்த்து இனிமேல் எங்க கிட்ட எதும் வம்பு வச்சுகிட்டனீங்க உங்களை குடும்பதோட அடிச்சு கொன்னுபுடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்து உயிர்பயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக கூமாப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் 1, 4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 323, 336, 506(ii) இதசவின் கீழும், 3 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் படி குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜராக, குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் குவிமுச

பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்கி குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீதான குற்றச்சாட்டு விசாரணை செய்வதற்கு போதிய முகாந்திரம் இருந்தபடியால், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது அரசு தரப்பால் அவருக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து வினவிக்கேட்டபோது குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றத்தினை ஒப்புக்கொள்ளாமலும், பொய்வழக்கு எனவும் கூறினார்கள். ஆகையால், 1 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 336, 506(ii) இதசவின் கீழும், 3,4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழான குற்றச்சாட்டினை வனைந்து விளக்கிய போது அவர் வழக்கை விசாரிக்க கோரி கேட்டதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு வழி வகை செய்யப்பட்டது.

3) அரசு தரப்பில் மொத்தம் 14 சாட்சிகள் பட்டியல் இடப்பட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:-**

4.1) இவ்வழக்கில் கடந்த 27.10.2019 ம் தேதி 22.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டியன் நிலையப் பொறுப்பில் இருந்த போது வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்து லட்சுமணன் மற்றும் ஜெனீத்குமார் ஆகியோர்களை விசாரித்து லட்சுமணன் என்வர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை (அ.சா.ஆ.3) 22.30 மணிக்கு பெற்று 28.10.2019 ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.155/2019, சட்டப்பிரிவுகள் 323, 324, 336, 506(ii) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) பதிவு

செய்தும், பின்பு 28.10.2019 ம் தேதி 01.30 மணிக்கு சாட்சிகள் ராஜேந்திரன், தங்கதுரை ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் (அ.சா.ஆ.5) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்தும், பின்பு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4.2) பின்னர், சார்பு ஆய்வாளர் திரு. பால்வண்ணநாதன் அவர்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 07.11.2019 ம் தேதி கூமாப்பட்டி பஸ் நிலையம் அருகில் வைத்து 4 வது குற்றம் சாட்டப்பட்ட நபரை கைது செய்தும், 1, 2, 3 ஆகிய குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்பு சார்பு ஆய்வாளர் திரு. நமச்சியாவம் அவர்கள் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 10.01.2020 அன்று சாட்சி பாலசுப்பிரமணியன் மற்றும் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சங்கீதகலா மற்றும் மருத்துவர் ஜெயசந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் (அ.சா.ஆ.7 மற்றும் அ.சாஆ.8) பெற்றும், பின்னர், புலன் விசாரணையை முடித்து குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் விளக்கிகேட்ட போது குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை எனவும் கூறிக் கொண்டார்கள். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டது.

6) அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய

சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதால் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7) குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப்படவில்லை என்றும், ஆகையால் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

## பிரச்சனை

8) அரசு தரப்பில், 1வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 336, 506(ii) இதசவின் கீழும், 3,4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை தகுந்த சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

## தீர்வு

9) 1வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 336, 506(ii) இதசவின் கீழும், 3,4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழான சாராம்சங்கள் காணப்படுகிறது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளார்களா என்பதை ஆராய்ந்து பார்க்கையில்,

9.1) அரசு தரப்பால் குற்றம் சாட்டப்பட்ட நபர் பொது இடத்தில் வைத்து அ.சா.1 யை அசிங்கமாக பேசி, கேட்போருக்கு முகம்சுழிக்கும் வகையில் நடந்துகொண்டார்கள் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

9.1.1) குற்றம் சாட்டப்பட்ட நபர் கடந்த 27.10.2019 ம் தேதி இரவு சுமார் 08.20 மணியளவில் இராமசாமியாபுரம் ராஜ்குமார் மருத்துவமனைக்கு முன்பு தங்கதுரை டெய்லர் கடைக்கு அருகில் அ.சா.1 யை பார்த்து அசிங்கமாக பேசி முகம் சுழிக்கும் வகையில் நடந்துகொண்டார்கள் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். இதச பிரிவு 294(b) குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு அரசு தரப்பு குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கீழ்காணும் சாராம்சங்களை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

1. சம்பவமானது பொது இடத்தில் நடந்தது என்றும்,

2. சம்பவத்தின் தொடர்ச்சியாக குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் பயன்படுத்திய தகாத வார்த்தைகளால் அருகில் இருந்தவர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டது என்றும் நிரூபிக்க வேண்டும்.

9.1.2) சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றது என்பதை நிரூபிப்பதற்காக புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணையின்போது அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணத்தை பட்டியல் சாட்சிகள் இராஜேந்திரன் மற்றும் தங்கதுரை ஆகியோர்கள் முன்னிலையில் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணமானது வழக்கு சம்பவமானது இராமசாமியாபுரம் ராஜ்குமார் மருத்துவமனைக்கு முன்பு தங்கதுரை டெய்லர் கடைக்கு அருகில் வைத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணமானது சம்பவ இடத்தில் வைத்து தயார்செய்யப்பட்டது என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். ஆனால், அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணமானது பட்டியல் சாட்சிகளான இராஜேந்திரன் மற்றும் தங்கதுரை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தினை பார்வையிட்டு, சம்பவயிடத்தில்

வைத்து தான் தயார் செய்தார்கள் என்பதை நிரூபணம் செய்வதற்கு பட்டியல் சாட்சிகளை நீதிமன்றத்தில் விசாரணை செய்யாமல் கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, பட்டியல் சாட்சிகள் இராஜேந்திரன் மற்றும் தங்கதுரை ஆகியோர்கள் அரசு தரப்பால் சாட்சிகளாக விசாரிக்கப்படாமல் விடப்பட்டு இருப்பது சம்பவமானது பொது இடத்தில் வைத்து தான் நடந்ததா என்ற சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது.

9.1.3) சம்பவயிடமானது பொது இடமா என்பதை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும், அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்கள் தயார் செய்யப்படுவற்கு முன்னிலை சாட்சியாக இருந்த இரண்டு நபர்களுமே இந்நீதிமன்றத்தில் சாட்சிகளாக ஆஜராகி புலன் விசாரணை அதிகாரியால் சம்பவயிடத்தினை பார்வையிட்டு சம்பவயிடத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடாத நிலையிலிருந்து, மேற்படி அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்களானது சம்பவயிடத்தை பார்வையிட்டு சம்பவயிடத்தில் வைத்து புலன்விசாரணை அதிகாரியால் தயார் செய்யப்படவில்லை என்பது தெளிவாக புலப்படுகிறது.

9.1.4) மேலும், அரசு தரப்பால் விசாரிக்கப்பட்டுள்ள புகார்தாரரான அ.சா.1 குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதால் தங்களுக்கு அருவருப்பு ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அரசுதரப்பால் எவ்வித தனிநபர் சாட்சியங்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை. இவ்வாறாக, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பொது இடத்தில் வைத்து தகாத வார்த்தையால் பேசியதால் அருகில் இருந்தவர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டது என்று எவ்வித தனிநபர் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் விட்டு இருப்பது இதச பிரிவு 294(b) குற்றச்சாட்டிற்கான சாராம்சங்கள் இவ்வழக்கில் நிகழ்ந்திருப்பதாக கருத இயலாது. ஆதலால்

குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 294(b) குற்றம் நிகழ்ந்ததாக அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.2) குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் சாட்சிகளுக்கு காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபித்துள்ளார்களா?

9.2.1) குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கம்பாலும், கல்லால் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளுக்கு இரத்தக்காயம் மற்றும் வலிக்காயம் மற்றும் வீக்கக்காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். ஆனால், வழக்கின் காயம்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில், குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லையென்று பிறழ்சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

9.2.2) மேலும், அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆவணங்களை பார்க்கும்போது, வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டுள்ளதென்றும், சாட்சிகள் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்பதும் தெரியவருகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டிருப்பதை காயச்சான்றிதழ்கள் மூலமாக தெரியவந்தாலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் தங்களுக்கு குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தான் ஏற்பட்டதா என்பதை குறித்து குறிப்பிட்டு கூறப்படாத நிலையிலிருந்து குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீதான பிரிவுகளான இதச பிரிவுகள் 324 மற்றும் 336 ன் கீழான குற்றம் நிகழ்ந்ததாக கருத இயலாது. ஆகையால், குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவுகள் 324 மற்றும் 336 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் இவ்வழக்கில் நிகழ்ந்திருப்பதாக

அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.3) குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இதச பிரிவு 506(ii)ன் கீழாக கொலைமிரட்டல் விடுத்து உயிர்பயத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

9.3.1) குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளை தகாத வார்த்தையால் பேசி, கொலைமிரட்டல் விடுத்து உயிர்பயத்தை ஏற்படுத்தினார்கள் என்பது அரசு தரப்பு வழக்கு ஆகும். அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் வகையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியத்தினை ஆராய்ந்து பார்க்கையில், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தங்களுக்கு கொலைமிரட்டல் விடுத்ததாகவும், கொலைமிரட்டல் விடுத்ததால் தங்களுக்கு உயிர்பயம் ஏற்பட்டது என்றோ குறிப்பிட்டு சாடசியம் அளிக்காமல் பிறழ்சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, இதச பிரிவு 506(ii)-ன் கீழான குற்ற செயல் இவ்வழக்கில் நிகழ்ந்ததாக கருத இயலாது. ஆகையால், அரசுதரப்பால் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க வில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.4) இவ்வழக்கின் மூலதனமான அ.சா.ஆ.1 ஆவணம் குறித்து நிரூபிக்க வேண்டிய அ.சா.1 தனது சாட்சியத்தில் அ.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து மட்டும் தன்னுடையதென்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்பது குறித்து தனக்கு தெரியாது என்றும், குற்றம் சாட்டப்பட்ட நபர்களும், சாட்சிகளும் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 ன் சாட்சியத்தின் அடிப்படையாக கொண்டு மட்டும் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தான் குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்று முடிவு

செய்வது நீதிக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஏனெனில் அ.சா.3 ன் சாட்சியமானது சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அல்ல. மாறாக, அவர் மேற்கொண்ட புலன்விசாரணையின் அடிப்படையிலேயே குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றச்செயல் புரிந்துள்ளார்கள் என முடிவு செய்வது நீதிக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், அரசு தரப்பில் சாட்சிகளாக இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படாமல் பட்டியல் சாட்சிகள் 3 முதல் பட்டியல் சாட்சி 14 வரையிலான சாட்சிகள் கைவிடப்பட்டுள்ளது, அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.இறுதியாக,**

10.1) முடிவாக,1 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 336, 506(ii) இதசவின் கீழும், 3,4 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 294(b), 324 (2 எண்ணிக்கை), 506(ii) இதசவின் கீழாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களை குவிமுச 248(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

10.2) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

10.3) குற்றம் சாட்டப்பட்ட நபர்களும், ஜாமீன்தாரர்களும் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் வருடம் ஜூன் மாதம் 25 ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.25 17:51:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

**1. அரசுத் தரப்பு சாட்சிகள் -**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | - | லட்சுமணன் | புகார்தாரர் |
| அ.சா.2 | - | ஜெனித்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | - | பொன்ராஜ் | விசாரணை அதிகாரி |

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் -**

அ.சா.ஆ.1 - புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1 ன் கையெழுத்து

அ.சா.ஆ.2 - புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.2 ன் அறிவேன் சாட்சி கையெழுத்து

அ.சா.ஆ.3 - புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ.4 - முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.5 - பார்வை மகஜர்

அ.சா.ஆ.6 - மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.7 - விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்

அ.சா.ஆ.8 - விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்

**3. அரசு தரப்பு சான்று பொருள்** - இல்லை

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்** - இல்லை.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.25 17:52:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.

**குறிப்பு -**

1. குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் நீதிமன்ற விசாரணையின்போது பிணையிலிருந்து வந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.